**செய்தி வெளியீடு எண்: 033** **நாள்: 13.01.2020**

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையில் முதலீட்டு வழிகாட்டுதல் மற்றும் ஒற்றைச் சாளர அனுமதிகளுக்கான உயர் மட்டக் குழுவின் இரண்டாவது கூட்டம் 13–1–2020 நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் முதலீடுகளை ஊக்குவிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அதில் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் தலைமையிலான முதலீட்டு வழிகாட்டுதல் மற்றும் ஒற்றைச் சாளர அனுமதிகளுக்கான உயர்மட்டக் குழுவின் இரண்டாவது கூட்டம், இன்று (13.1.2020) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

1.11.2019 அன்று நடைபெற்ற முதல் கூட்டத்தில், ரூ. 8,120 கோடி முதலீடுகளில், 16,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில், 21 தொழில் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. இன்று நடைபெற்ற இரண்டாவது கூட்டத்தில் பல்வேறு நிலைகளில் இருந்த 15 தொழில் திட்டங்கள் விவாதிக்கப்பட்டு, அனுமதிகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் ரூ. 6,608 கோடி அளவிற்கான தொழில் முதலீடுகள் முழுமையாக செயல்பாட்டிற்கு வந்து, சுமார் 6,763 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை விரைவாக உருவாக்கும் வாய்ப்பு உறுதியாகி உள்ளது.

இத்திட்டங்கள் தூத்துக்குடி, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், திருச்சி, பெரம்பலூர், கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் என தமிழ்நாட்டின் பல பகுதிகளில் செயல்படுத்தப்படும்.

மேலும், இந்தக் கூட்டத்தில், ஒற்றைச் சாளர முறையில் வழங்கப்பட்ட தொழில் அனுமதிகள், பெரும் தொழில் முதலீட்டுத் திட்டங்கள் தொடர்புடைய நிலுவை இனங்கள், தொழில் துவங்குவதை எளிதாக்கிட தேவையான சீர்திருத்தங்கள், வணிகம் செய்தலை எளிதாக்குதல் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை தொடர்புடைய இனங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத், மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு. கே. சி. கருப்பண்ணன், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. முருகானந்தம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**